மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை

திருவருள்மிகு ஸ்ரீ கண்ணகாதேவி தேவஸ்தானம்

# சங்காபிஷேகப் பெருவிழா-

## 2019.02.21 – வியாழன் காலை 9.30 மணிமுதல்

அம்பிகை அடியார்களே,

ஈழமணித் திருநாட்டின் வடபால் சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் மயிலிட்டி பதியிலே பன்னெடுங்காலமாக கோயில்கொண்டு அருள்பாலித்துக்கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ கண்ணகாதேவிக்கும் பரிவாரமூர்த்தியாக விளங்கும் மஹாகணபதிக்கும் ஸ்ரீ பைரவருக்கும் ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விளம்பி வருஷம் தைமாத 27ம் நாள் ஞாயிற்றுக்கிழமை 10-02-2019 சிவஸ்ரீ அரிகர.மதிவதனக் குருக்கள் தலைமையில் மஹாகும்பாபிஷேகம் மிகவும் பக்திபூ ர்வமாகவும் கிரியாபூ ர்வமாகவும் நடைபெற்றதுடன் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் இடம்பெற்று வருகின்றது. பூ ர்த்தி தினமான விளம்பி வருடம் மாசித்திங்கள் 9ம் நாள் வியாழக்கிழமை (21.02.2019) அன்று அம்பிகைக்கு சங்காபிஷேகம் இடம்பெறுவதற்கும் அம்பிகையின் அருட்கடாட்சம் கிடைத்துள்ளது. காலை 9.30 மணியிலிருந்து பூ ர்வாங்கக்கிரியைகள் ஆரம்பமாகி சங்காபிடேகமும் அதனைத்தொடர்ந்து அம்பிகைக்கு விசேட அபிடேக ஆராதனையும் இடம்பெற்றதும் அம்பிகை வீதிவலம் வந்ததும் அடியார்கள் அனைவருக்கும் மகேஸ்வர பூ ஜை இடம்பெறும் என்பதையும் அறியத்தருகின்றோம். மெய்யடியார்கள் ஆசாரசீலர்களாக சங்காபிஷேகப்பெருவிழாவில் கலந்துகொண்டு அம்பிகையினைச் சரணடைந்து வழிபடுவதோடு கண்ணகைத்தாயின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணமும் வேண்டிக்கொள்கின்றோம்.

சுபம்

இங்ஙனம்

ஆதீனகர்த்தர்கள்